**Tamilmanam International Research Journal of Tamil Studies**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

https://tamilmanam.in/

*Article Type: Research Article*

# Tēvanēyappāvāṇariṉ tirukkuṟaḷ tamiḻmarapuraiyiṉ māṇpu

**Dr. V. Vignesh*,**

*Assistant Professor of Tamil, PSG College of Arts And Science, Coimbatore-641014.*

*Correspondence: vignesh@psgcas.ac.in, Tel: +919597203214

**Received**: 26-01-2026; **Revised**: 27-01-2026; **Accepted**: 30-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Thirukkural is a book of great importance in Tamil literature. Although there are ten ancient texts, the texts that have appeared in the last century and this century are numerous. The reason why the texts of the Thirukkural have increased over time is because the Thirukkural embodies the principle of being applicable to both the individual and the collective, as in the saying, "He who sees shoulder, sees shoulder." No matter what style the text is composed in, it is clear that part of it follows the Parimēlaḻakarurai. In this way, the unique text of the Thirukkural, which was written by Moḻiñāyiṟu tēvanēyappāvāṇar, who was a scholar of Tamil ethnicity, language and culture, is called tirukkuṟaḷ tamiḻmarapurai. The purpose of this article is to highlight the merits of this tradition.

**Keywords:** Thirukkural, Tamil literature, Parimēlaḻakarurai, Moḻiñāyiṟu tēvanēyappāvāṇar, tirukkuṟaḷ tamiḻmarapurai

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# தேவநேயப்பாவாணரின் திருக்குறள் தமிழ்மரபுரையின் மாண்பு

**டாக்டர். வே.விக்னேசு,** தமிழ் உதவிப்பேராசிரியர்,

பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014.

**தோற்றுவாய் :**

தமிழ் மொழிக்கு வளமையுஞ் செழுமையுஞ் சேர்த்த நூல்; உலக மக்களனைவரும் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழவேண்டுமென்ற பெரு நோக்கத்தால் இயற்றப்பெற்ற நூல்; தமிழினம் மட்டுமின்றி உலகத்திற்கே உயரிய வாழ்வியலைக் கற்றுக்கொடுத்த ஒரே நூல் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். தமிழர் வாழ்வியலைத் தெளிவிக்க எழுந்த இந்நூற்குள்ள மற்றுமொரு சிறப்பு இன்றுவரை இந்நூலுக்கு உரைகள் பெருகி வருவதும் பல்வேறு நிலைகளில் உரைகள் தோன்றினும் தோன்றும் பொருளனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் பொருள்வளம் உள்ளதாக; இன்பப்பேரூற்றாக விளங்குவது திருக்குறளின் தன்னேரில்லாச் சிறப்பாம். இவ்வகையில், திருக்குறளுக்குத் தோன்றியுள்ள பல்வேறு உரைகளுள் இன்றியமையாததும் தமிழ்மரபுப்படி இயன்றதுமான உரைநூல் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களால் அரிதின்முயன்று இயற்றப்பெற்ற திருக்குறள் தமிழ்மரபுரை என்பதாம். பாவாணரின் அறிவுக் கொடையெனும் பேரொளியால் துலங்கிய இத்தமிழ்மரபுரையின் குன்றாச்சிறப்புகளைச் சுட்டி, இதுகாண் திருக்குறள் தமிழ்மரபுரையின் மாண்பு எனத் தெளிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

**திருக்குறள் உரைகள் :**

திருக்குறளுக்கு இன்றுவரை எழுந்துள்ள பல்வேறு உரைகளுள் பழையவுரைகளாகப் பதின்மரின் உரைகளுண்டு. அவற்றுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர் என்னும் ஐவருரையைத் தவிர ஏனையன காலச்செலவில் காணக் கிடைக்காது கரந்தன. இவையன்றி, இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு வகைமையிற் பல்திற நோக்கோடு புதியவுரைகள் பல தோன்றியுள. இங்ஙனம் திருக்குறளுக்கு உரைகள் காலந்தோறும் பெருகுதற்குக் காரணம் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பதற்கிணங்கப் பல்லோர்க்கும் பல்லாற்றானும் பயன்படும் பெற்றிமையைத் திருக்குறள் கொண்டிலங்குவதேயாம்.

ஒருவர் தான் காண விழையும் கருத்தை வற்றாது சுரக்கும் கருத்துச் சுரங்கம் திருக்குறள் ஆதலின், பலதிறத்தவரும் தம்தம் சார்புக்கேற்ற கருத்துக்களைத் திருக்குறளில் கண்டின்புறவியலும். இத்தகு சிறப்பினைத் திருக்குறள் கொண்டிருப்பதாலேயே திருக்குறள், அறிஞர்கள் பலராலும்

https://doi.org/10.63300/tm09012026

தாம்கொண்ட கொள்கைக்கு ஏற்ப உரைகாண இயலுகின்றது. ஆயின், வள்ளுவனாரின் கருத்து இன்னதே என்று அறுதியிட்டுரைத்தல் ஒண்ணாது என்பதும் மறக்கற்பாலதன்றாம்.

**பாவாணரின் தமிழ்மரபுரை :**

தொட்டனைத்தூறும் மணற்கேணியான திருக்குறளை இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு திறத்தவரும் ஆய்ந்து தம்தம் சார்புக்கேற்ப உரைகளைக்கண்டு வெளிப்படுத்தினார். அவருள், மூலவுரையாசிரியர், பொருளுரையாசிரியர், கவியுரையாசிரியர், இயல்புரையாசிரியர், வாழ்வியலுரையாசிரியர் என்னும் பல்திற உரையாசிரியன்மாரிருக்கத் தமிழ்மரபுரை கண்டவர், தமிழ்நலஞ்சான்ற தகைசால் பெருந்தகை மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரவர்களே ஆவர்.

அலமந்த தமிழன்னைக்குத் தகுந்த அரியாசனமளித்து, தன் வீறுகொண்டு படைப்புகளால்; தம் கூரறிவு நலம் வெளிப்படுமாறு இயற்றிய படைப்புகளால் தமிழையும் தமிழனையும் புறப்பிணிப்புகளிலிருந்து மீட்டெடுத்தத் தமிழ்மொழியின் மீட்பர் ஆவர். இத்தகு தமிழ்ச்சான்றோர் தமிழ் இன, மொழி, பண்பாடு மரபை அடியொற்றித் திருக்குறளுக்குக் கண்ட உரையே 'திருக்குறள் தமிழ் மரபுரை' என்னும் பெயரிய ஒப்பற்ற உரையாம்.

**தமிழ் மரபுரையமைப்பு :**

உயரிய பண்பட்ட குடியின்கண் வழிவழி வந்தவர்கள் பரம்பரையாகக் கொண்டுள்ள கொள்கைகள், பழக்க வழக்கங்கள் இன்னோரன்ன பண்புகள் யாவும் மரபு என வழங்கப்பெறும். அவ்வகையில், தமிழரின் மரபுப்படி திருக்குறளுக்கு எழுதப்பட்ட தமிழ்மரபுரை 1969 - ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. கவிநலஞ்சான்றதான பரிமேலழகர் உரை செழுமையும் இலக்கிய வளமையும் உடையதேயாயினும் சிற்சில குறைகளும் அவ்வுரையில் உண்டென்பர். பரிமேலழகர் தங்காலத்திற்கேற்பவும் தங்குலஞ்சார்ந்த; ஆரியசமய மரபிற்கேற்ப உரை செய்தமையே அவருரையில் மருவான குறைகளாம். அவ்வகையில், பரிமேலழகரின் உரையின் ஒப்ப நுட்பங்களை ஏற்றுப் போற்றும் பாவாணர், அவ்வுரையில் சில மாசுகளும் மண்டியுள்ளதனை, **"பரிமேலழகருரையே தலைசிறந்ததெனவும், எவ்வுரையாலும் வீழ்த்தப்படாததெனவும் பொதுவாகக் கருதப்பட்டு வருகின்றது. அது பெரும்பாலும் ஏனையவுரைகள் காணமுடியாத உண்மைப் பொருளைப் பரிமேலழகர் நுண்மையாக நோக்கிக் கண்டுள்ளார் என்பதும் உண்மையே. ஆயின் பெறுதற்குரிய அறுசுவையரச வுண்டியில் ஆங்காங்குக் கடுநஞ்சு கலந்து படைத்து உள்ள தொப்ப உண்மைக்கு மாறானதும் தமிழுக்குந் தமிழர்க்குங் கேடு பயப்பதுமான ஆரிய நச்சுக் கருத்துக்களை முதலும் இடையும் முடிவுமாக நெடுகலும் குறிக்கோளாகக் கொண்டு புகுத்தியிருப்பது இவ்வுரையை நடுவு நிலையுடன் நோக்கும் எவர்க்கும் புலனாகாமல் போகாது .**

**இனி சில குறள்கட்கு முழுத்தவறாகவும் சில குறள்கட்கு அரைத் தவறாகவும் பொருள் கூறியுள்ளார். சில தென் சொற்களை வடசொல்லாகக் காட்டியிருப்பதுடன் சில சொற்கட்குத் தவறான இலக்கண வமைதியுங் கூறியுள்ளார்"** (திருக்குறள் தமிழ்மரபுரை- முன்னுரை- ப- 5) என்பதான் விதந்துரைப்பார். இப் பெருங்குறையை நீக்குதற் பொருட்டே பாவாணரின் தமிழ்மரபுரை தோன்றிற்று.

இத்தமிழ்மரபுரையின் ஆய்வுரையில், தமிழினத்தின் வாழ்வியல், தமிழரின் வாழ்க்கைக் குறிக்கோள், தமிழிலக்கிய வகைமை, ஆசிரியர் திருவள்ளுவனாரின் காலச்சமயநிலை, திருவள்ளுவர் திருக்குறளியற்றிய நோக்கம், திருக்குறளின் மாண்பு இன்னோரன்னவற்றை முறையே பாவாணர் தம் நுண்மாண் நுழைபுலத்தால் விளக்கி மொழிகிறார். இத்தமிழ் மரபுரை, வழிவழி வந்த தமிழினத்தில் மரபுப்படி திருக்குறளுக்கு உரைகண்டுள்ளது. திருக்குறளை நுண்ணிதின் ஆய்ந்து வெளிப்படுத்திய தமிழ்மரபுரையில், ஒளிவீசும் அருங்கருத்துக்கள் பலவாயினும் ஒரு சிலவற்றை ஈண்டுக் குறித்துக் காட்டுதல் தகும்.

**திருவள்ளுவர் பற்றி பாவாணர் :**

திருவள்ளுவரின் பெயர்க்காரணத்தை மொழியும் பாவாணர், **"இவர் பெயர் வள்ளுவன் என்பதே. வள்ளுவர் என்பது உயர்வுப் பன்மை. இவரது இறைப்பற்றொடு கூடிய ஒழுகத்தின் உயர்வும், இவர் நூலின் மறைத்தன்மையும், இவர்க்குத் திருமை (தெய்வத்தன்மை) யுண்டாக்கியதலினால், இவர் பெயர்க்கு முன் திரு என்னும் அடைமொழி சேர்க்கப் பெற்றது. தேவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர், முதற்பாவலர், பெருநாவலர், செந்நாப்போதார், நாயனார் முதலிய பிற பெயர்களெல்லாம் இவரைப் பாராட்டிக் கூறிய புலவர் ஆண்ட புகழ்ச் சொற்களேயன்றி வேறல்ல."** (முன்னுரை.ப.5) என்று ஆய்ந்து கூறுவார். அன்றியும், **"வள் என்னும் அடிச்சொற்குள்ள பலபொருள்களுள் மூன்று கூர்மை, வலிமை, வண்மை என்பன. ஆதலால் வள்ளுவன் என்னும் சொற்குக் கூர்மதியன், வல்லவன் , வள்ளியோன் என்று மூலப்பொருள் கொள்ளலாம்"** (மேற்படி-ப.5) என்றும் நுவல்கிறார்.

**திருவள்ளுவர் சமயமும் காலமும் :**

திருவள்ளுவர் எச்சமயத்தவர் என ஆயும் பாவாணர், அறுவகை மதங்களையும் ஆய்ந்து, முடிவில் வள்ளுவர் எச்சமயச் சார்புடையவரும் அல்லர் என்றுரைத்து, வள்ளுவர் பொதுமை இறைச்சமயமான 'கடவுள் மதம்' சார்ந்தவர் என இயம்புகிறார். இங்ஙனமே, வள்ளுவரின் காலம் பற்றி நுவல்கையில், **"திருவள்ளுவர் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டென்று கொள்வதே**

**பொருத்தமாம் எனினும் 5 -ஆம் நூற்றாண்டு வரை கொள்ளவும் இடமுண்டாம்** (மேற்படி-ப.11) என்றுரைக்கிறார்.

**திருவள்ளுவர் திருக்குறளியற்றியதன் நோக்கம் :**

திருவள்ளுவர் திருக்குறளியற்றியதன் நோக்கத்தை மொழியும் பாவாணர்,

**"ஆரியத்தாலும் நம்பா (நாத்திக) மதங்களாலும், சிறப்பாக ஆரியத்தால், குமுகாயத் துறையிலும் சமயத்துறையிலும் தமிழகத்திற்கு ஏற்பட்ட எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்மாக வாழவேண்டு மென்னும் இன்னருள் நோக்கங் கொண்டே தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் திண்ணிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்க."** (முன்னுரை) என்றுரைக்கும் பகுதி பாவாணரின் ஆழ்ந்த சிந்தனையில் உதித்த்தாம்.

**திருக்குறட் சிறப்பு :**

திருக்குறட் சிறப்பினை நுதலும் பாவாணர், 'உலகியல் இனிது நடைபெறுவதற்கு இன்றியமையாத நூல்நிலையும் இல்லறமும் துறவறமும் அரசியலும் கணவன் மனைவியர் காமவின்பமும் பற்றி, உண்மையாகவும் நடுநிலைமையாகவும் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த வகையினும்; தலைசிறந்த பாவாலும் சிறந்த சொற்களாலும் இலக்கணவழுவின்றி இருவகையணிகளுடன்; சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் நூல் திருக்குறள் ஒன்றே' என்று இனிதே கூறி, திருக்குறள் எல்லாவகையிலும் ஒப்புயர்வற்ற உலகத்தமிழ் நூலாம். எவ்வகை நோக்கினும் திருக்குறள் தூய முதனூலாம் என்று வரையறுத்து, அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பொருளையும் பற்றி விளக்கமாகக் கூறுவதனாலும், ஒவ்வோர் அதிகாரத்திலும் அதற்குரிய பொருளைப் பற்றிய எவ்லாக் கருத்துக்களையும் கொண்டிருப்பதனாலும் திருக்குறள் முழுநிறைவான நூலாம் என்றும் ஆய்ந்து கூறுவார் பாவாணர்.

**திருக்குறளின் நிலைபேறு :**

திருக்குறள் தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றி, உலக முழுமைக்கும் ஏற்புடையதென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததேயாம். வாழ்க்கைத் துறையிலும், ஆட்சித்துறையிலும் மட்டுமன்றிச் சமயத்துறையிலும் பொதுவாயிருப்பதால் பொதுமறை எனப்பட்டது என்று திருக்குறளின் உலகப் பொதுமையினை நுவன்று, திருக்குறள் இத்துணைக் காலந்தான் அல்லது இன்ன நூற்றாண்டுவரைதான் பயன்படுமென்று எவருஞ் சொல்லுதற்கிடனின்றி, எக்காலத்திற்கும்

ஏற்றதாயிருப்பதும் அதன் ஏற்றங்களுள் ஒன்றாம் என்று திருக்குறளின் நிலைபேற்றையும், கால வரம்பில்லா உயிர்மையையும் சுட்டிக் காட்டுகிறார்.

**இன்பத்துப்பால் :**

பாவாணர் காமத்துப்பாலை இன்பத்துப்பால் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கான காரணத்தை **"அறவழியிலிட்டப் பெற்றபொருளைக் கொண்டு இன்பந்துய்க்கும் வகையைப் பற்றிக்கூறும் பெரும்பகுதி இன்பத்துப்பாலாம். இது அகப் பொருளிலக்கணத்திற் சொல்லப்பட்ட 'மூன்றன் பகுதி'யின் (தொல்-அகத்-41) முடிநிலை பற்றியதாம். அறம் பொருளின்பம் (வீடு) என்று கூறிவதே மரபாதலாலும், இப்பொருப்பாகுபாடு தமிழர் கண்டதேயாதலாலும் இப்பகுதிக்கு இன்பத்துப்பால் என்பதே ஆசிரியர் இட்ட பெயராம்"** (தமிழ்மரபுரை.ப-602) என்று கூறும்பகுதி, அவரின் ஆய்ந்த முடிவேயாம்.

**பாவாணரின் தமிழ்மரபுரைத் திறன் :**

'அந்தணர்' என்னுஞ் சொல்லை விளக்கமுனைந்த பாவாணர், **"அந்தணர் என்னுஞ்சொல் அழகிய குளிர்ந்த அருளுடையவர் என்னும் பொருளது. அருளாவது ஓரறிவுயிர் முதல் ஆரறிவுயிர் வரைப்பட்ட எல்லாவுயிர்களிடத்தும் இரக்கங் கொண்டு அன்பு செய்தல். இது துறவியார்க்கே இயலும். அதனால் அருளுடைமையைத் துறவு நிலைக்குரிய முதலறமாகக் குறித்தார் திருவள்ளுவர். தமக்கு வாழ்வளித்துக் காக்கும் தலை நாகரிக மக்களை தாழ்வாகக் கருதும் தந்நல ஆணவப் பிராமணர் அந்தணராகார் என்பது இதனால் அறிவிக்கப்பட்டது"** (மேற்படி - ப-54) என்று விளக்குகிறார். ஆகலின், வள்ளுவனார் குறித்த அந்தணர் எல்லா உயிரையும் தன்னுயிர் போல போற்றி, அனைத்துயிர் மாட்டும் அன்பும் அருளும் உடைய அருள்வடிவாகிய சான்றோரேயாவார் என்பது பெற்றாம்.

**தென்புலத்தார் :**

தென்புலத்தார் பற்றிக்கூறும் பாவாணர், 'தென்புலத்தார்' என்பதற்கு 'இறந்தமுன்னோர்' எனப்பொருள் கொண்டு, அதற்குரிய காரணத்தை, **"முதற்காலத் தமிழகமாகிய தென்றிசை கூற்றுவன் திசையாகவும் இறந்தோரின் இருப்பிடமாகவும் கொள்ளப்பட்டது. தென்புலத்தார்க்குச் செய்யும் அறவினையாவது, அவர் ஆவி ஆறுதலும் மகிழ்வும் அடைதற் பொருட்டு அவர் இறந்த நாளில் தெய்வத்திற்குப் படைப்பது போல் அடையாள முறையிற் சில வுண்டிகளை அவர்க்கும் படைத்து, அவர் பெயரால் துறவியர்க்கும் இரப்போர்க்கும் சிறந்த உணவும் புத்தாடையும் உதவுதல்"** (மேற்படி- பக்1-60) என்று தகுந்த சான்றுகளான் நுவல்கிறார்.

**இல்லறத்தாலும் வீடுபேறு பெறலாம் :**

**"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ**

**மீண்டு முயலப் படும்"** (குறள்-265) என்னும் குறளுக்கு உரையெழுதும் பாவாணர், **"ஈண்டு முயலப்படும் என்றதனால், மறுமையிற் பயன்படும் என்பது பெறப்பட்டது. 'வேண்டிய' என்றவை மண்ணின்பமும் விண்ணின்பமும் வீண்ணின்பமும் வீட்டின்பமுமாகிய மூவகையின்பங்கள். இல்லறத்தாலும் இம்மூன்றையும் பெறலாம். இவ்விரு வழிகளுள் ஒன்றைத் தெரிந்து கொள்வது அவரவர் ஆற்றலையும் விருப்பத்தையும் பொறுத்தது. அன்புடைமை, விருந்தோம்பல், நடுநிலைமை, ஒப்புரவறிதல், ஈகை முதலிய அறங்கள் ஆரியர் மேற்கொள்ளுதற்கு அரியனவாகலின், அவர் துறவறத்தையே விரும்புவர். அதனாலேயே மேற்கதி வீடுபேறுகள் தவத்தாலன்றி எய்தப்படா என்றார் பரிமேலழகர். கூடாஒழுக்கமும் போலித்துறவும் பூண்டுகொண்டே ஒருவன் மெய்த்துறவி போல் நடிக்கலாம் இந்நடிப்பு இல்லறத்தில் இயலாது"** (மேற்படி.பக்.158-159) என்று நுண்ணிதின் உரைப்பதனான், இல்லறத்தாலும் வீடுபேறு பெறலாம் என்னும் தமிழ்மரபைநிலை நாட்டுகின்றார் பாவாணர்.

**பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் :**

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்னுங் குறட்பாக்குத் தமிழ்மரபுரையியற்றும் பாவாணர், **"வினைவயத்தாற் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன் பயனனுபவித்தல் எல்லா வருணத்தாருக்கும் ஒத்தலிற் 'பிறப்பொக்கு' மென்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் 'சிறப்பொவ்வா' வென்றும் கூறினார் என்பது பரிமேலழகரின் ஆரியச்சார்புச் சிறப்புரை"** (மேற்படி-ப-550) என்பதனான் பரிமேலழகர் உரையை மறுத்துரைக்கின்றார்.

இங்ஙனமே, **"தொழில் வேறுபாடுகள் அதிகாரமுள்ளது; அதிகாரமில்லது; வருமானம் மிக்கது; வருமானம் குறைந்தது; தற்சார்பானது; மற்சார்பானது; நிழலிற் செய்வது; வெயிலிற்செய்வது; மனவுழைப்புள்ளது; உடலுழைப்புள்ளது; துப்புரவானது; துப்புரவற்றது; ஒழுக்கக்கேட்டிற் கிடமுள்ளது; ஒழுக்கக்கேட்டிற் கிடமில்லது; இன்றியமையாதது; இன்றியமை யாததல்லாதது; பிறரை இன்புறுத்துவது; பிறரை இன்புறுத்தாதது; நல்லது; தீயது"** (ப.550) என்று தொழில் வேறுபாடுகளைச் சிறப்புற நுவல்கிறார். இங்ஙனம், பரிமேலழகர் ஆரியச் சார்பு நிலையோடு உரையெழுதியததாகக் கருதப்படும் இடங்களிலெல்லாம், பாவாணர் நுண்ணிதின்

ஆய்ந்து, தமிழ்மரபின்படி உரையெழுதித் தமிழ்மரபை நிலைபெறச் செய்துள்ளார் என்பது ஈண்டுச் சுட்டத்தக்கதாம்.

**பாவாணரின் பல்துறை யறிவு :**

பாவாணரின் ஆழ்ந்தகன்ற பல்துறை அறிவுக்குச் சான்றாகத் தமிழ்மரபுரையின் பலபகுதிகள் மிளிர்கின்றன. குறிப்பாக, 'ஊருணி நீர்நிறைந் தற்றே' (குறள் 215) என்னும் குறளுக்கு உரைவரையும் பாவாணர், பாரி முல்லைக்குத் தேரும், பேகன் மயிலுக்குப் போர்வையும் உதவிய அரிய செயலைச் சான்று காட்டுகிறார். அவ்வாறே, தூது என்னும் அதிகாரத்தின் பெயர் விளக்கத்தில் ஔவையார் அதியமான் பொருட்டுத் தூது சென்றதனைச் சான்றாகக் காட்டுகிறார். இங்ஙனமே, 'அன்பில்லார் எல்லாம் தமக்குரியர்' என்னுங் குறளுக்குச் சான்றாக, **"தன் தம்பியால் தன்நாடு கொள்ளப்பட்டுக் காட்டிற் போய்த் தங்கியிருந்த குமணன் தன்னைப் பாடிய பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்குத் தன்தலையை வெட்டிக் கொண்டு போய் தன் தம்பியிடம் காட்டிப் பெரும்பொருள் பெறுமாறு தன் வாளைக் கொடுத்தானாம்"** (ப- 75) என்றாங்கு, குமணன்

வரலாற்றைக்கூறி தமிழர்தம் வரலாற்று மரபைத் தவறாது தம் மரபுரையில் இடம்பெறச் செய்துள்ளமை போற்றற்பாலதாம்.

இங்ஙனமே, பாவாணர் தம் உரையில், புராணத்தில் கூறப்படும் சில கதைகளை மறுத்து, அக்கதைகளின் உண்மைத் தன்மைகளை ஆய்ந்து விளக்குகிறார். அன்றியும், 'ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்' என்னுங் குறளுக்குப் பத்தினித் தெய்வமான கண்ணகிக்குப் படிமஞ்சமைக்கக் கல் எடுக்கவும் கனக விசயரின் செருக்கினை அடக்கவும் வடநாடு சென்ற சேரன் செங்குட்டுவன் முப்பத்தியிரண்டு மாதம் நீங்கியிருந்தும் தென்னாட்டில் எவ்வித குழப்படும் இல்லாமலிருந்தமையைச் சான்றாகக் காட்டுகிறார்.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா' என்னுங் குறளுக்குப் பாண்டியன் நெருஞ்செழியன் கோவலனைக் கொல்லச் செய்ததால் தன் செங்கோல் தவறியதால், தன்னுயிரைத் துறந்ததைச் சான்றாகக் காட்டுகிறார். இவ்வாறு தமிழ்மரபின்படி யமைந்த பழமையான வரலாற்றுச் செய்திகளைக் குறள்குட்குச் சான்றாகக் காட்டித் தமிழர் மரபைப் பலரும் அறியச் செய்துள்ளார் என்பது பாராட்டற்பாலதேயாம்.

தமிழர் தொடர்பான வரலாற்றுச் செய்திகளோடு, பழமொழிகள் பலவற்றையும் தம் உரையில் எடுத்தாண்டுள்ளார் பாவாணர். அவற்றுள், தமிழ்ப் பழமொழிகளோடன்றி, மலையாளப் பழமொழிகளும், ஆங்கிலப் பழமொழிகளையும் கையாண்டுள்ளார். தவிர, உலகியல் சார்ந்த வழக்கியல் சிலவற்றையும் தம் தமிழ்மரபுரையில் புலப்படுத்தியுள்ளார். இங்ஙனம், பாவாணரின்

தமிழ்மரபுரை, தமிழரின் மரபை நிலை நாட்டுவதோடு, பாவாணரின் பல்துறையறிவுக்குச் சான்றாகப் பல்கலைக் கொள்கலமாகவும் திகழ்கின்றது என்பதை அவ்வுரையை ஆழ்ந்து கற்போர் நன்குணர்வர் என்பது திண்ணம்.

**முடிவு :**

இவ்வகையில் நோக்குங்கால் அடியிற்கண்ட முடிபுகள் இக்கட்டுரையினின்றும் பெறப்படுகின்றன.

- திருக்குறளுக்குப் பல்வேறு காலங்களில் வெவ்வேறு உரைகள் தோன்றிடினும், தமிழ் மரபுப்படி இயற்றப்பட்ட திருக்குறளுக்குத் தமிழ் மரபுப்படியே உரை செய்தவர் தேவநேயப் பாவாணரே ஆவார்.
- இங்ஙனம், தமிழர்மரபைத் தெளிவிக்கத் தோன்றிய திருக்குறள் தமிழ்மரபுரை பல்லாற்றானும் சிறப்புற்றோங்கிய தமிழர்மரபைத் திருக்குறள் வழிநின்று இயம்புகின்றது.
- பரிமேலழகரின் உரையில் பல சிறப்புகள் இருப்பினும் ஆரியச் சார்போடு எழுதப்பட்ட அவ்வுரையின் பல பகுதிகளை மறுக்கும் பாவாணர், தம் நுண்மாண் நுழைபுலத்தால் இயற்றிய தமிழ்மரபுரை திருவள்ளுவரின் உளக்குறிப்புக்களைத் துலக்கிக் காட்டும் விளக்கெனத் திகழ்கின்றது.
- திருக்குறளைப் பற்பல கோணங்களில் ஊடுருவி ஆய்ந்து, தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பறையறைந்து சாற்றும் பாவாணரின் தமிழ்மரபுரையால் திருக்குறளின் பற்பல குறள்களும் துலங்கின; இருளனின்றும் நீங்கின.
- திருக்குறளைத் தமிழ்மரபின்படி நுண்ணிதின் உணர்ந்து அவ்வுணர்ச்சி முதிர்வினால் பாவாணர் யாத்த திருக்குறள் தமிழ்மரபுரை ஒப்பற்ற நலன் உடையதாகத் திகழ்வதோடு, திருவள்ளுவர் ஆணைவழிநிற்கும் பாவாணரின் செவ்வியைப் புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்பது வெளிப்படையில் வெளிப்படை.

**முதன்மைச் சான்று மூலம்:**


- தேவநேயப்பாவாணர், ஞா, 'திருக்குறள் தமிழ்மரபுரை', நேசமணி பதிப்பகம் காட்டுப்பாடி விரிவு, முதற்பதிப்பு -1969.


**துணைமைச் சான்றாதாரங்கள் :**


- அரவிந்தன், மு.வை., 'உரையாசிரியர்கள்', மணிவாசகர் பதிப்பகம் சென்னை. இரண்டாம்பதிப்பு - 2008.
- வரதராசனார், மு., 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கைவிளக்கம்' பாரிநிலையம் சென்னை - 2009.